மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே. (௩௦)

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேலனைக் கன்னிப் பூகமுடன்
றருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே. (௩௧)

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக்குஞ்சுத்தஞானமெனு
ந்,தண்டையம்புண் டரிகந்தருவாய்சண் டதண்டவெஞ்சூர் [டக்
மண்டலங்கொண்டுபண்டண்டரண்டங்கொண்டுமண்டிமின்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல் வேறொட்டகாவலனே.

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளை திருவரையிற்
கிண்கிணி யோசை பதினா லுலகமுங் கேட்டதுவே. (௩௩)

தெள்ளிய வேனலிற் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் றாள்வேட் டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத்தோதகச்சொல்லை
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்டநெஞ்சே. [நல்ல

யான்றானெனுஞ்சொல்லிரண்டுங் கெட்டாலன்றியாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே. (௩௫)

தடக்கொற்ற வேண்மயி லேயிடர் தீரத் தனிவிடினீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே. (௩௬

